கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

முன்னிலை திருமதி. ப. சிவரஞ்ஜினி, B.Sc.,LL.M.,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

அருப்புக்கோட்டை.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் திங்கள்கிழமை

வழக்கிடை மனு எண் 3/2025

உள்

அசல் வழக்கு எண். 42/2023

----

1. திருவேங்கடம் .... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சுப்பாரெட்டி
2. நாராயணசாமி ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 13.11.2025 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 11.03.2026 ம் தேதியன்று இந்த நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.முத்துமணி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.M.ஆறுமுகம் அவர்கள் முன்னிலையாகியும் இருந்த நிலையில், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்காக இருந்து வந்த இம்மனுவினை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்....

<u>உத்தரவு</u>

இடைநிலை மனு எண். 2/2023 மனுவில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கையை இரத்து செய்தும், தாவா சொத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள தற்காலிக ஆக்கிரமிப்பு மற்றும் இயற்கை அமைப்பு மற்றும் அடி அளவுகளையும் பார்வையிட்டு சர்வேயர் மூலமாகவும், மனுதாரர்/வாதி தரப்பு ஆவணங்கள் படியும், அளவீடு செய்ய ஏதுவாக மீண்டும் நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்தும், உத்தரவிட வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனுவானது உ.வி.மு.ச. கட்டளை 26 விதி 9 மற்றும் சிபிசி 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.23 19:16:23 +0530

2. <u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u>: –

(1) பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி தாவா சொத்துக்களை நீதிமன்றம் தெளிவாக தெரிந்து கொள்ளும் வண்ணம் பிராதுடன் வரைபடம் இணைக்கப்பட்டுள்ளதாகவும், பிராது வரைபடத்தில் தாவா சொத்து "ABCD" ஆக காட்டப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்து உள்பட கிழமேல் 31 அடியும், தென்வடல் 61 அடியும் (மொத்தம் 6 செண்ட்) கொண்ட பிராது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள EBGF பகுதி காலியிடமானது மனுதாரர்/வாதிக்கு கடந்த 29.05.1972 ம் தேதியில் அவரது தாய்மாமா பாலகிருஷ்ண ரெட்டியார் என்பவர் எழுதிக்கொடுத்த ஆவண எண். 430/1972 என்ற இனாம் செட்டில்மெண்ட் ஆவணப்படி பாத்தியம் என்றும், அது மேற்படி ஆவணத்தில் 2 வது சொத்தாக காட்டப்பட்டுள்ளதாகவும், மேற்படி இனாம் செட்டில்மெண்ட்யை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு தாவா சொத்து உள்பட மொத்த சொத்தினையும் மனுதாரர்/வாதி காலியிடமாக வைத்து தனித்து அனுபவம் செய்ததாகவும், கடந்த 22.01.1996 ம் தேதியில் வருவாய் துறையில் உரிய கட்டணம் செலுத்தி சர்வேயர் மூலம் அளவீடு செய்து அதன் அடிப்படையில் மனுதாரர்/வாதி பெயரில் பட்டா எண். 2680 ஏற்பட்டு எவ்வித இடையூறும் இன்றி தனித்து அனுபவம் செய்து வந்ததாகவும், தாவா சொத்திற்கு வடக்கே 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றும், தாவா சொத்தினைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 3ம் மனிதர்கள் என்றும், தாவா சொத்தில் அவர்களுக்கு எவ்வித பாத்தியமோ, அனுபவமோ, உரிமையோ எக்காலத்திலும் கிடையாது என்றும், மனுதாரர்/வாதிக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் மருத்துவ பரிசோதனைக்கு சென்று வர தோதாக அருப்புக்கோட்டையில் தற்சமயம் குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும், கடந்த 6 மாதத்திற்கு முன்பு மனுதாரர்/வாதியின் மனைவி கோதை என்பவர் தாவா சொத்தினை பார்வையிட ஊருக்கு சென்றுபோது, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு வடக்கே உள்ள இடத்தில் வீடுகட்டி கொண்டு இருந்ததாகவும், ஆனால் இடம் போடாமல் வீடுகட்டி வருவதை பார்த்த மனுதாரர்/வாதியின் மனைவி சந்தேகம் அடைந்து அவரது மகனை அழைத்து தாவா சொத்து உள்பட மொத்த சொத்தையும் அளந்து பார்த்ததில்,

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.23 19:16:29 +0530

மனுதாரர்/வாதி ஊரில் இல்லாததை சாதகமாக பயன்படுத்தி மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா இடத்தினையும் சேர்த்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆக்கிரமித்து வீடு கட்டி வருவது சம்பந்தமாக கேட்டதற்கு, அவர்கள் சரியாகத்தான் கட்டியுள்ளோம் என்றும், வேண்டுமென்றால் சர்வேயர் வைத்து அளந்து கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார்கள்.

(2) மனுதாரர்/வாதி தாவா சொத்தினை சர்வேயர் மூலம் அளவீடு செய்ய வருவாய்துறையில் உரிய கட்டணம் செலுத்தி தாவா சொத்து உள்பட மொத்த சொத்தினையும் கடந்த 27.12.2023 ம் தேதியில் அளந்து பார்த்ததில் தாவா சொத்தான "ABCD" பகுதி வாதியின் சொத்தான சர்வே எண். 324/15 ட ல் கட்டுப்பட்ட சொத்து என்பதும், தாவா சொத்தினை ஆக்கிரமிப்பு செய்து பிரதிவாதிகள் வீடுகட்டி விட்டனர் என்பது மனுதாரர்/வாதிக்கு தெரிய வந்து, மேற்படி தாவா சொத்தினை அளவீடு செய்ததற்கு அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியரால் புல எல்லை சான்றும் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மோசடியாக ஏற்படுத்திய ஆக்கிரமிப்பை அகற்ற கோரி மனுதாரர்/வாதி ஊர் பெரியவர்களுடன் சென்று கேட்டதற்கு மேற்படி ஆக்கிரமிப்பு செய்து கட்டிய கட்டிடத்தை அகற்றி விடுவதாக உறுதி அளித்துவிட்டு, இதுவரை தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றவில்லை என்றும், மேற்படியார்களின் சட்டத்திற்கு புறம்பான செய்கையினை நீதிமன்ற உத்தரவு மூலமே கட்டுப்படுத்த இயலும் என்பதால் தாவா வழக்கு தாக்கல் செய்து, தாவா சொத்துக்களில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகளையும், தாவா சொத்தின் இயற்கை அமைப்பு மற்றும் அடி அளவுகளையும், பார்வையிட்டு சர்வேயர் மூலமாக அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஏதுவாக நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து உத்தரவிட வேண்டி ஏற்கனவே நீதிமன்றத்தில் I.A.No:2/2023 மனுதாக்கல் செய்து, நீதிமன்றம் உத்தரவுப்படி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தாவா சொத்தினை சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்யப்பட்டதாகவும், மேற்படி மனுவில் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் ஆட்சேபனை தெரிவித்துள்ளதாகவும், அதில் குறிப்பாக தாவா சொத்தினை சர்வேயர் நிர்ணயம் செய்ய, சர்வேயர் நேரடியாக

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.23 19:16:35 +0530

தாவா சொத்திற்கு தெற்கே சர்வே கல் உள்ளது எனவும், அதுதான் 'H' புள்ளி என்றும் சர்வேயர் சுட்டிக்காட்டியதை ஆணையர் அறிக்கையில் காட்டவில்லை என்றும், தாவா சொத்தினை நிர்ணயம் செய்ய தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சர்வேயர் அளந்து காட்டியதில் தாவா சொத்தில் வாதியால் சர்வே செய்து போடப்பட்ட கம்பி வேலியை தாண்டி தெற்கே தென்வடல் 5 அடி சர்வே எண். 324/ 16B3 சர்வே எண்ணில் ஆக்கிரமிப்பு உள்ளது என்று அளவீடு செய்து காட்டியதில் அதிலும் ஆணையர் அவரது வரைபடம் மற்றும் அறிக்கையில் தென்வடல் 3 அடி என்று தவறாக குறிப்பிட்டுள்ளதாகவும், மேலும், மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்தினை வடக்கிலிருந்து எதிர்மனுதாரர் வீட்டினை கடந்து தெற்கே அளக்க கோரியதில் சர்வேயர் அளக்க முடியும் என்றும், ஆனால் தற்போது முடியாது அப்பீல் செய்து அளந்து கொள்ளுங்கள் என்று கூறியதை ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என ஆணையர் அறிக்கைக்கு மனுதாரர்/வாதி தரப்பில் ஆட்சேபணையை தெரிவித்துள்ளார்.

(3). தாவா வழக்கில் உள்ள பிரச்சனை என்பது, தாவா சொத்தில் கிழமேல் 21 அடியும், தென்வடல் 3 அடியும் பிரதிவாதி செய்துள்ள ஆக்கிரமிப்பானது பிரதிவாதி சொத்தான சர்வே எண்.324/22 க்கும், வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தான சர்வே எண். 324/15B க்கும் இடையே உள்ள தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் வருகிறது என்று உள்ள போது, தாவா சொத்திற்கு வடக்கே உள்ள பிரதிவாதியின் சர்வே எண். 324/22 யை வடக்கிலிருந்து தெற்காக அளவீடு செய்யாமல், மனுதாரரின் புல எண்ணை மட்டும் சர்வேயர் அளந்து ஆணையருக்கு நிர்ணயம் செய்து காட்டியது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மேலும் தாவா சொத்தினை வடக்கே இருந்து எதிர்மனுதாரர் வீட்டை உள்ளடக்கி தெற்கு நோக்கி அளந்து பார்த்தால் தாவா சொத்தானது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்ணில் கட்டுப்பட்டதா? எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டதா? என்பதை கண்டறிய முடியும் என்றும், மேலும் மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்து உட்பட மொத்த சொத்தான 6 செண்ட் நிலமானது கடந்த 29.05.1972 ம் தேதிய ஆவண எண்.430/1972 இனாம் செட்டில்மெண்ட் ஆவணப்படி பாத்தியம் என்றும், ஆனால் உட்பிரிவு செய்யப்பட்ட புல வரைபடத்தில், 5.1 செண்ட் என குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எனவே தாவா சொத்தினை மனுதாரர்/வாதி

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.23 19:16:44 +0530

தரப்பு ஆவணங்கள் படியும் அளவீடு செய்ய வேண்டியது அவசியமாகும் என்றும், எனவே I.A.No: 2/2023 மனுவில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கையை Struck off செய்தும், தாவா சொத்தில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் ஏற்படுத்தியுள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகளையும், தாவா சொத்தின் இயற்கை அமைப்பு மற்றும் அடி அளவுகளையும், பார்வையிட்டு சர்வேயர் மூலமாகவும், மனுதாரர்/வாதி தரப்பு ஆவணங்கள் படியும் அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஏதுவாக மீண்டும் நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல்.

3. <u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மறுப்புரையின் சுருக்கம்</u>: –

(1) மனுதாரர்/வாதி மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுதாரர் தாக்கல் செய்து இருந்த இடைநிலை மனு எண்.2/2023 ல் நீதிமன்ற ஆணையாளர், மேற்படி மனுச் சொத்தினை ஆய்வு செய்வதற்கு முன்பே மனுதாரர் தரப்பில் நிலஅளவை செய்து மனுச்சொத்து சர்வே எண்.324/15B முழுவதும் கற்கள் ஊன்றி கம்பி வேலி அமைக்கப்பட்டு இருந்ததாகவும், நில அளவையரால் மனுச் சொத்தான சர்வே எண்.324/15B முழுவதும் அளந்து காண்பிக்கப்பட்டதாகவும், மனுச்சொத்தின் வடக்கு பக்கம் வடகிழக்கு மூலையில் மனுதாரரால் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ள இடம் வரை மனுச் சொத்தின் வடக்கு எல்லையாக காண்பிக்கப்பட்டு, மனுசொத்தின் வடக்கு பக்கம் கம்பி வேலியை தாண்டி 1 அடி விட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் வீடு கட்டப்பட்டுள்ளது என்றும், மனுச் சொத்தின் வடக்குப் பக்கம் 3 அடி அகலத்திலும், 21 அடி நீளத்திலும் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்ற விபரத்தினை நிலஅளவையர் அளந்து காட்டி கூறியதாகவும், மேலும் நில அளவையரால் மனுச் சொத்தின் தெற்கு பக்க எல்லையானது மனுதாரர் மனுச் சொத்தில் அமைத்து உள்ள கம்பி வேலியை தாண்டி தெற்கு பக்கம் 3 அடி வெளியே, எல்லையாக அளந்து காண்பிக்கப்பட்டதாகவும், நிலஅளவையரால் மனுச் சொத்தின் கிழக்கு மற்றும் மேற்கு பக்க எல்லைகள் சரியாக அளந்து காண்பிக்கப்பட்டது.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.23 19:16:49 +0530

(2) மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை பத்தி 4–ல் "மனுதாரரின் சொத்திற்கு பாத்தியபட்ட எண்.324/15B நிலத்திற்கு தெற்கே உள்ள "H" point–ல் கருப்பு நிறத்தில் "RD" சர்வே கல் "H" Point என்று சர்வேயர் கூறியதாகவும், மேற்படி "H" Point–ல் இருந்து சர்வே எண். 324/15B சொத்தானது 79.4 மீட்டர் அளவில் அளவீடு செய்து காண்பிக்கப்பட்டது" என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி, மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுசொத்தின் அனைத்து திசைகளிலும் முழுவதுமாக அளந்து சர்வேயர் காண்பித்து நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையானது மனுதாரருக்கு எதிராக உள்ள காரணத்தினால் மீண்டும் நீதிமன்றம் ஆணையரை நியமனம் செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது நிலைநிறுத்ததக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல்.

4. <u>பிரச்சினை : –</u>

இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா ? என்பதே ஆகும்,

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்/வாதியின் மனு மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மறுப்புரை பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படவில்லை. இருதரப்பிலும் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. வழக்குக் கோப்பை பரிசீலிக்கையில், தாவா சொத்து மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரமும், தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவது வகையாட்களோ எவ்வகையிலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், தாவா சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடத்தை அகற்றுவதற்கு ஏதுவாக செயலுறுத்து கட்டளை பரிகாரமும் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் வாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், நீதிமன்ற ஆணையர் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை இரத்து செய்து, புதிதாக

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.23 19:16:56 +0530

நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து உத்தரவிட வேண்டி, மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

7. மனுதாரர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில், தாவா சொத்தினை சர்வேயர் நிர்ணயம் செய்ய, சர்வேயர் நேரடியாக தாவா சொத்திற்கு தெற்கே சர்வே கல் உள்ளது எனவும், அதுதான் 'H' புள்ளி என்றும் சர்வேயர் சுட்டிக்காட்டியதை ஆணையர் அவரது அறிக்கையில் காட்டவில்லை என்றும், தாவா சொத்தினை சர்வேயர் அளந்து காட்டியதில் தாவா சொத்தில் மனுதாரர்/வாதியால் அமைக்கப்பட்ட கம்பி வேலியை தாண்டி தெற்கே தென்வடல் 5 அடி சர்வே எண். 324/ 16B3 ல் ஆக்கிரமிப்பு உள்ளது என்று அளவீடு செய்து காட்டியதில், ஆணையர் அவரது வரைபடம் மற்றும் அறிக்கையில் தென்வடல் 3 அடி என்று தவறாக குறிப்பிட்டுள்ளார் என்றும், தாவா சொத்திற்கு வடக்கே உள்ள பிரதிவாதியின் சர்வே எண்.324/22 யை வடக்கிலிருந்து தெற்காக அளவீடு செய்யாமல், மனுதாரர்/வாதியின் புல எண்ணை மட்டும் சர்வேயர் அளந்து ஆணையருக்கு நிர்ணயம் செய்து காட்டியுள்ளார் என்றும், ஆகையால், ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தை இரத்து செய்து, மீண்டும் நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்யவேண்டியது அவசியம் என்றும் வாதிட்டார்.

8. மாறாக, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், தாவா சொத்திற்கு தெற்கே சர்வே கல் உள்ளது எனவும், அது H புள்ளி என்றும், சர்வேயர் சுட்டிக்காட்டியதை ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றும், தாவா சொத்தினை நிர்ணயம் செய்யும்போது, தாவா சொத்தில் மனுதாரர்/வாதியால் போடப்பட்ட கம்பி வேலியை தாண்டி, தெற்கே தென்வடல் 5 அடி சர்வே எண். 324/16B3 ல் ஆக்கிரமிப்பு உள்ளது என்றும், ஆனால் உண்மையில் தென்வடல் 3 அடி தான் ஆக்கிரமிப்பு உள்ளது என்றும், மனுதாரர்/வாதி வேண்டுமென்றே தவறாக கூறியுள்ளார் என்றும், மனுதாரர்/வாதி தரப்பில் வடக்கிலிருந்து தெற்காக அளக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ள நிலையில், ஆணையர் தாவா சொத்தினை சர்வே H புள்ளியிலிருந்து மேற்கு பக்கம் உள்ள C புள்ளி மற்றும் D புள்ளிகளை சரியாக அளவீடு செய்து ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார்

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.23 19:17:04 +0530

என்றும், ஆகையால், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வாதிட்டார்.

9. மனுதாரர்/வாதி அவரது மனுவில், தாவா சொத்தினை நிர்ணயம் செய்ய, சர்வேயர் நேரடியாக தாவா சொத்திற்கு தெற்கே சர்வே கல் உள்ளது எனவும், அதுதான் 'H' புள்ளி என்றும், சர்வேயர் சுட்டிக்காட்டியதை ஆணையர் அவரது அறிக்கையில் காட்டவில்லை என்று குறிப்பிட்டுள்ள நிலையில், இந்நீதிமன்றம் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தை பரிசீலித்தது. மேற்படி பரிசீலனையில், நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை பாரா 4–ல், "**மனு சொத்தினை சர்வேயர் மற்றும் VAO ஆகியோர்கள் தரப்பில் வருவாய்த்துறை ஆவணத்தின் அடிப்படையில் அளவீடு செய்தனர். மனுதாரரின் சொத்திற்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.324/15B நிலத்திற்கும் தெற்கே உள்ள "H" Point–ல் கருப்பு நிறத்தில் "RD' சர்வே கல் "H" Point என்று சர்வேயர் கூறினார். மேற்படி H" Point–ல் இருந்து சர்வே எண்.324/15B சொத்தானது 79.4 மீட்டர் அளவில் அளவீடு செய்து காண்பிக்கப்பட்டது. அதனடிப்படையில் சர்வே எண்.324/15B சொத்து முழுவதையும் சர்வேயர் அளவீடு செய்து காண்பித்தார்"** என்று குறிப்பிட்டுள்ளது தெரியவருகிறது. ஆக, மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையை பரிசீலிக்கையில், ஆணையர் அவரது அறிக்கையில் சர்வேயர் காட்டிய சர்வே கல்லான H புள்ளியை குறிப்பிட்டுள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும், மனுதாரர்/வாதி தரப்பில், தாவா சொத்தினை சர்வேயர் அளந்து காட்டியதில் தாவா சொத்தில் மனுதாரர்/வாதியால் அமைக்கப்பட்ட கம்பி வேலியை தாண்டி தெற்கே தென்வடல் 5 அடி சர்வே எண். 324/16B3 ல் ஆக்கிரமிப்பு உள்ளது என்று அளவீடு செய்து காட்டியதில், ஆணையர் அவரது வரைபடம் மற்றும் அறிக்கையில் தென்வடல் 3 அடி என்று தவறாக குறிப்பிட்டுள்ளார் என்று குறிப்பிட்டுள்ள நிலையில், இந்நீதிமன்றம் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தை பரிசீலித்தது. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள பிராதை பரிசீலிக்கையில், மனுதாரர்/வாதிக்கு தாவா சொத்து உட்பட மொத்த சொத்தையும் சேர்த்து, மொத்தம் 6 செண்ட் நிலம் 29.05.1972 ம் தேதியிட்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவண எண்.430/1972 மூலம் மனுதாரர்/வாதிக்கு பாத்தியம்

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.23 19:17:11 +0530

என்று குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும், நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.324/15B ன் அடி அளவுகளை கணக்கிடுகையில், சர்வே எண்.324/15B ன் மொத்த விஸ்தீரணம் 6.02 செண்ட் வருவது தெரியவருகிறது. ஆக, மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்திற்கு தெற்கே தென்வடல் 5 அடி சர்வே எண். 324/16B3 ல் ஆக்கிரமிப்பு உள்ளது என்று குறிப்பிட்டுள்ள நிலையில், ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில், குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளை கணக்கிடுகையில், மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட 6 செண்ட் நிலமும், மேற்படி ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எல்கைக்குள் உள்ளது தெரியவருகிறது.

10. மேலும், மனுதாரர்/வாதி தரப்பில், தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் வருகிறது என்பதே பிரச்சனை என்பதால், தாவா சொத்திற்கு வடக்கே உள்ள எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் சர்வே எண்.324/22 யை வடக்கிலிருந்து தெற்காக அளவீடு செய்யாமல், மனுதாரர்/வாதியின் புல எண்ணை மட்டும் சர்வேயர் அளந்து ஆணையருக்கு நிர்ணயம் செய்து காட்டியது ஏற்புடையதல்ல என்று எடுத்துரைக்கப்பட்ட நிலையில், நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில், **"மேலும் மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட நிலையில் "H" Point–ல் இருந்து மேற்கு நோக்கி "C" Point–ல் "RD' சர்வே கல் இருந்தது. மேற்படி "H" Point–ல் இருந்து "C" Point– 63.2 மீட்டர் இருந்ததை சர்வேயர் அளவீடு செய்து காண்பித்தார். மேற்படி "C" Point–ஐ மையமாக வைத்து வடக்கு நோக்கி அளவீடு செய்து காண்பித்தார். அவ்வாறு அளவீடு செய்த நிலையில் சர்வே எண்.324/15B சொத்தின் கம்பிவேலியை தாண்டி தென்புறம் 3 அடி வரையில் சர்வே எண்.324/15B இருப்பதாக சர்வேயர் கூறினார்"** என்று குறிப்பிட்டுள்ளார். ஆக, நீதிமன்ற ஆணையர் அறிக்கையை பரிசீலிக்கையில், H புள்ளியான ஒரு சர்வே கல்லை மட்டும் வைத்து தாவா சொத்தை நிர்ணயம் செய்யாமல், தாவா சொத்தினை நிர்ணயம் செய்வதற்கு மற்றொரு சர்வே கல்லான C புள்ளியை வைத்தும், தாவா சொத்தை மறுநிர்ணயம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

11. மனுதாரர்/வாதி தரப்பில், தாவா சொத்தை வடக்கிலிருந்து தெற்காக அளக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ள நிலையில், நீதிமன்ற ஆணையர் இரண்டு

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.23 19:17:16 +0530

சர்வே கற்கள் வைத்து தாவா சொத்தை நிர்ணயம் செய்து அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளதால், திசைகளை காட்டிலும் சர்வே கல் நிரந்தரபுள்ளி என்பதால், சர்வேயர் உதவியுடன் தாவா சொத்தை சரியாக அளவீடு செய்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆக, மேற்படி சங்கதிகளை வைத்து பார்க்கும்போது, நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றில் எவ்வித குறைபாடும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால், நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தை இரத்து செய்து, மீண்டும் புதிதாக வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யக்கோரி, தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

மேற்படி, உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ம் நாள் பகரப்பட்டது.

SIVARANJINI P Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.23 19:17:23 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :– இல்லை

<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> – இல்லை

SIVARANJINI P Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.23 19:17:28 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை.
இடைநிலைமனு எண்.03/2025
உள்
அ.வ.எண்.42/2023
சீரான/வரைவு உத்தரவு
நாள் – 23.03.2026